**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>முருகன்</td><td>தொழில் :</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம் :</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி :</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**4.1.2024 OS No. 28/2022 வா.சா.1 முருகன் ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன பணியிலிருந்தேன் என்றால் வேளாண் துறையில் உதவி பொறியாளராக பணிபுரிந்தேன். ஓய்வு பெற்று எவ்வளவு நாள் ஆகிறது என்றால் 1.6.2018-ல் விருப்பு ஓய்வு பெற்றுவிட்டேன். தாவா வழக்கில் வாதிகளுக்காக நான் மட்டும்சாட்சி அளிக்க போகிறேனா அல்லது மற்ற சாட்சிகளும் சாட்சியளிக்க போகிறார்களா என்றால் நான் மட்டும்தான் சாட்சியமளிக்கபோகிறேன். என் சகோதரர் செல்வத்தின் மனைவி திருப்பாச்சேத்தி ஊராட்சி மன்ற தலைவியாக இருந்தார் என்றால் சரிதான். எனது சகோதரர் பிரபாகர் 5 ஆண்டுகள் திருப்பாச்சேத்தி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான்.

2. எனது சகோதரர் பிரபாகரன் 5 ஆண்டுகளும், செல்வத்தின் மனைவி 5 ஆண்டுகளும் திருப்பாச்சேத்தி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார்கள் என்றால் சரிதான். எனது மற்ற சகோதாரர் ராஜா, சீனிவாசன் என்ன பணியில் இருக்கிறார்கள் என்றால் ராஜா எஸ்எஸ்ஐ என்ற திட்டத்தின் கீழ் இடைக்காட்டூர் பள்ளியில் பணியில் உள்ளார். சீனிவாசன் விவசாயம் செய்து வருகிறார். நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்திலோ, பிராதிலோ என் சகோதரர் ராஜா பணியில் உள்ள விபரத்தையும், நான் விருப்ப ஓய்வு பெற்ற விபரத்தையும் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் குடும்ப சொத்துக்களை நிர்வாகம் செய்து பராமரிப்பு செலவுகள் யார் செய்து வந்தது என்றால் இரண்டாம் வாதி செல்வம்தான் பார்த்து வந்தார்.

3. எங்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து வாதிகளான நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் பாகம் பிரிக்கவில்லை. எனது தகப்பனார் கணேசன் எந்த வருடம் இறந்தார் என்றால் 8.12.2000ல் இறந்தார். என் தகப்பனார் 2000-ல் இறந்த பின்பு இவ்வழக்கு தாக்கல் செய்த 2022-ம் ஆண்டு வரை பாகம் பிரிக்கப்படாமல் இருப்பதற்கு ஏதேனும் காரணம் சொல்லமுடியுமா என்றால் கூட்டாகதான் அனுபவம் செய்துவருகிறோம். பிராதுடன் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 வம்சாவழிபட்டியலில் சுப்பிரமணியபிள்ளையின் வாரிசுகள் 3பேர் இறந்துவிட்டதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் எந்த தேதியில் இறந்துவிட்டார்கள் என்பதை எனது பிராதிலோ, நிருபணவாக்குமூலத்திலோ, வம்சாவழிபட்டியலிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அது 100 வருடங்களுக்கு மேல் இருக்கும்.

4. ஆறுமுகம்பிள்ளை மகன் தொத்தன்(எ) முனியாண்டி மகன் கணேசன் பிள்ளை எப்போது

இறந்தார் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணியபிள்ளையின் மகன் முத்துக்குமாரபிள்ளை மகன் முனியாண்டிபிள்ளை என்று காண்பித்துள்ளதில் முத்துக்குமாரப்பிள்ளைக்கு ஒரே வாரிசு மட்டும் என்றால் சரிதான். முனியாண்டிபிள்ளையின் வாரிசுகள் யார் யார் என்று வம்சாவழிபட்டியலில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வம்சாவழிபட்டியலில் கண்ட சுப்பையா பிள்ளை மகன் சுந்தரம்பிள்ளை (எ) ராஜா பிள்ளை என்பது வம்சாவழிபட்டியலில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வம்சாவழிபட்டியலில் முருகேசன் பிள்ளை (எ) சுப்பிரமணியபிள்ளையின் வாரிசுகள் யார் யார் என்று தெளிவாக குறிப்படவில்லை என்றால் சரிதான்.

5. பிராதில் சொல்லப்பட்டுள்ளபடி வம்சாவழிபட்டியலில் உறவு முறைகள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் கணினி கோளாறு காரணமாக கோடுகள் முன்பின்னாக வந்ததால் குழப்பமாக காண்பிக்கப்பட்டுள்ளது. சுப்பையாபிள்ளையின் மகன் சுந்தரம்பிள்ளை(எ) ராஜா பிள்ளைக்கு ராஜம்மாள்(எ) காமாட்சியம்மாள் இருந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராஜம்மாள்(எ) காமாட்சியம்மாள் இறந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் 15-20 வருடங்கள் இருக்கும். ராஜாபிள்ளைக்கு பின்னிட்டுதான் அவரது மனைவி ராஜம்மாள்(எ) காமாட்சியம்மாள் இறந்தார் என்றால் சரிதான்.

6. நான் தாக்கல் செய்துள்ள வம்சாவழிபட்டியலில் சுந்தரம்பிள்ளை(எ)ராஜாபிள்ளைக்கு வாரிசுகள் இல்லை என காட்டியுள்ளேன் என்றால் இன்றைய தேதியில் அவருக்கு வாரிசுகள் இல்லை என்பதை அவ்வாறு காட்டியுள்ளேன். சுந்தரம்பிள்ளை(எ)ராஜாபிள்ளை இறந்த பின்பு 2-ம் வாதி செல்வம் சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண்.113/6என்ற சொத்தை சுந்தரம்பிள்ளை(எ)ராஜாபிள்ளை இறந்த பின்பு 2-ம் வாதி செல்வம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது எங்கள் அம்மாவின் அக்கா காமாட்சியம்மாள் சொத்தாகும். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் புல எண்.113/6ஐ 2-ம் வாதி செல்வம் கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் பி.வா.சா.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. புல எண்.113/6 சொத்து உள்ளிட்ட குடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே மு.வ.எண்.59/1949 என்று சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை சொத்துக்கள் எத்தனை செட்டியூல் சொத்துக்களாக காட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் K செட்டியூல் வரை காட்டப்பட்டது. ஒவ்வொரு செட்டியூலிலும் எத்தனை சொத்துக்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் A செட்டியூலில் 60 லக்க சொத்துக்களும், B செட்டியூலில் 20 லக்க சொத்துக்களும், C செட்டியூலில் 9 லக்க சொத்துக்களும், D செட்டியூலில் 7-8 லக்க சொத்துக்களும், E செட்டியூலில் 5 லக்க சொத்துக்களும், F செட்டியூலில் 4 லக்க சொத்துக்களும், G செட்டியூலில் 3 லக்க சொத்துக்களும், H செட்டியூலில் 2 லக்க சொத்துக்களும், I செட்டியூலில் 4 லக்க சொத்துக்களும், J செட்டியூலில் 3 லக்க சொத்துக்களும், K செட்டியூலில் 3 லக்க சொத்துக்களும் காட்டப்பட்டிருந்தது.

8. புல எண்.116/4 என்ற சொத்தை என் சகோதரர் 2-ம் வாதி செல்வம் 5.10.2015ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் என் சகோதரர் புல எண்.116/4ஐ கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் பி.வா.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என் சகோதரர் விற்பனை செய்த சொத்துக்கள் முந்தைய வழக்கான மு.வ.எண்.59/1949ல் சேர்ந்திருந்ததா என்றால் சேர்ந்திருந்தது. தாவா வழக்கு சர்வே எண்.98/2டி2 ஆகும். சர்வே எண்.98/2டி2 விஸ்தீரணம் என்ன என்றால் 58 செண்ட் ஆகும். சர்வே எண்.98/2டி2 விஸ்தீரணம் 58 செண்டிற்கு என் பெயரிலோ, என் தகப்பனார் பெயரிலோ, என் சகோதரர் பெயரிலோ பட்டா இருந்ததா என்றால் இல்லை. ஆனால் அனுபவம் நாங்கள்தான் செய்து வருகிறோம்.

9. சர்வே எண்.98/2டி2 சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்பதற்கு இது வரை நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்தள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் விற்பனை செய்த 58 செண்ட்டின் சர்வே எண்.98/2டி3 என்றால் சரிதான். சர்வே எண்.98/2டி3 சொத்திற்கு என் தகப்பனார் கணேசன் பெயரில் 96-ம் நம்பர் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.98/2டி2 வடக்கே சர்வே எண்.98/2டி1 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.98/2டி1-ல் வம்சாவழிபட்டியலில் கண்ட முருகேசன் (எ) சுப்பிரமணியாபிள்ளையின் மகன் முத்துராமலிங்கம் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.98/2டி1-ம் 58 செண்ட் அளவுள்ளது என்றால் சரிதான்.

10. முத்துராமலிங்கம் வழக்கறிஞராக இருந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். சர்வே எண்.98/2டி1, சர்வே எண்.98/2டி2, சர்வே எண்.98/2டி3 யுடிஆர் காலத்திலேயே சப்டிவிசனாக பிரிக்கப்பட்டது என்றால் இருக்கலாம். சர்வே எண்.98/2டி1 க்கு முருகேசன் மகன் முத்துராமலிங்கம் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.98/2டி2க்கு திருவாயிஅம்மாள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.98/2டி3 சொத்தான 58 செண்டை என் சகோதரர் செல்வம் எங்களுக்காகவும், அவருக்காகவும் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.98/2டி3 பொறுத்து எங்கள் குடும்பத்தில் பாகம் செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

11. சர்வே எண்.98/2டி3 வீட்டுமனையாக பிரிவினை செய்துதான் பல நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 14.2.2012ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பிளாட் எண்.14ஐ பெரியசாமிபிள்ளைக்கு என் சகோதரர் செல்வம் விற்பனை செய்தார் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் பி.வா.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 9.5.2015-ல் செல்லமணி என்பவருக்கு என் சகோதரர் சர்வே எண்.98/2டி3-ல் ஒரு பகுதியை விற்பனை செய்த கிரைய ஆவணம்தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் பி.வா.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

12. சர்வே எண்.98/2டி3 மட்டும்தான் எங்களுக்கு பாத்தியம் என்றும் எனவேதான் அந்த

58 செண்ட் சொத்தை மட்டும் என் சகோதரர் மூலம் நாங்கள் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண்.98/2டி3 வடபுறமுள்ள சர்வே எண்.98/2டி2 சொத்து திருவாயிஅம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எங்களுக்கு முந்தைய வழக்கில் ஏற்பட்ட இறுதி நிலை தீர்ப்பாணையின் படி 87 1/2 செண்ட் எங்களுக்கு பாத்தியம் என்றால் சரிதான். இறுதி நிலை தீர்ப்பாணையின் படி கிடைத்த 87 1/2 செண்ட் சொத்தை எனது தகப்பனார் ஒப்படைப்பு பெற்றாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் எங்கள் அனுபவத்தில் உள்ளது. இறுதி நிலை தீர்ப்பாணையின் படி கிடைத்த சொத்தை 87 1/2 செண்ட் சொத்தை என் அப்பா ஒப்படைப்பு பெற்றாரா இல்லையா என்ற விபரத்தை பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

13. முந்தைய வழக்கான அசல் வழக்கு 59/1949ன் படி எங்களுக்கு சொத்து கிடைக்கவில்லை என்றாலும், குடும்ப ஏற்பாட்டின் படி தாவா சொத்தான சர்வே எண். 98/2டில் எங்களுக்கு 58 செண்ட் கிடைத்துள்ளது என்றாலும் சரியல்ல. குடும்ப ஏற்பாட்டின் படி எங்கள் வம்சாவழியில் உள்ள முருகேசனுக்கு ஒரு 58 செண்டும், திருவாயிஅம்மாளின் தகப்பனார் முனியாண்டியாபிள்ளைக்கு 58 செண்டும் கிடைத்துள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு கிடைத்ததன் அடிப்படையில்தான் மேற்படி புல எண்.98/2டிஆனது 3 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. யுடிஆரில் தாவா புல எண். 98/2டி ஆனது 3 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக அவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது.

14. யுடிஆரில் காலத்திலேயே எனது தகப்பனார் கணேசன் பிள்ளையின் சம்மதத்தின் அடிப்படையிலேயே 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தனிதனியாக அனுபவம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டதன் அடிப்படையில்தான் மொத்த சொத்திற்கு தென் புறத்தில் கிடைத்த 58 செண்ட் ஆனது எனது தகப்பனாருக்கு கிடைக்கப்பட்டு எனது தகப்பனார் பேரில் 96 நம்பர் பட்டா ஏற்பட்டு அவர் அனுபவம் செய்து அவர் காலமான பின்பு அந்த சொத்தை நாங்கள் அடைந்து விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் விற்பனை செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களில் புல எண்.98/2டி2 ஆனது திருவாயிஅம்மாளுக்கு பாத்தியம் என்பதை நான்குமாலில் ஒப்புக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. செல்வம் மற்றும் திருவாயி பெயரில்தான் உள்ளது.

15. புல எண்.98/2டி2 க்கு செல்வம் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். புல எண்.98/2டி2 செல்வம் மற்றும் திருவாயிஅம்மாள் பெயரில் காட்டப்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புல எண்.98/2டி2 சொத்தானது திருவாயிஅம்மாளுக்கு யுடிஆர் காலத்தில் 476 எண் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. புல எண்.98/2டி2 சொத்தை திருவாயிஅம்மாள் அடைந்து தொடர்ச்சியாக அரசிற்கு வரி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. புல எண்.98/2டி2 சொத்தில் காட்டுகருவேலமரங்களை வளர்ந்திருந்ததை அதனை அகற்ற சொல்லி வருவாய் துறை மூலமாக 23.2.2017-ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். திருவாயிஅம்மாளுக்கு பாத்தியப்பட்ட 58 செண்ட் சொத்தை தனது மகள் வழி பேத்திகளான இந்த வழக்கின் 11-ம் பிரதவாதி மீனாட்சி, 16-ம் பிரதிவாதி சாவித்திரி 24.1.2019ம் தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணங்கள் மூலமாக தனித்தனியாக பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல.

16. சொத்தின் பாத்தியத்தை அடைந்த 11,16 பிரதிவாதிகள் தங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. யுடிஆர் காலத்தில் திருவாயி அம்மாளுக்கு பட்டா ஏற்பட்டு அவர் அனுபவித்து வந்து தனது பேத்திகளுக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்திய விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. 11,16 பிரதிவாதிகள் புல எண்.98/2டி2-ல் காட்டுகருவேலமரங்களை வெட்டி அப்புறப்படுத்தியபோது என் சகோதரர் செல்வம் சென்று ஆட்சேபித்தார் என்றால் சரிதான். எங்கள் பங்கு சொத்து என்பதால் ஆட்சேபித்தார். எங்கள் குடும்பம் கல்வியிலும், பொருளாதாரத்திலும், நிர்வாகத்திலும் செல்வாக்கு படைத்தவர்கள் என்றால் செல்வாக்கை வைத்து நாங்கள் எதையும் செய்வதில்லை. சட்டப்படி நடக்கவேண்டிதான் வழக்கு தொடர்ந்துள்ளோம்.

17. 11,16 பிரதிவாதிகளை மிரட்டி பிரச்சனை செய்ததால் அவர்கள் காவல்துறைக்கு சென்ற காரணத்தால் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். புல எண்.98/2டி2 சொத்தில் வாதிகளுக்கோ, எங்கள் தகப்பனாருக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தில் எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.